## தெற்கு வீதி தொடர்புறுத்தல் செயற்திட்டம் - 2014

தெற்கு வீதி தொடர்புறுத்தல் செயற்திட்டத்தின் 2014 ஆகஸ்ட் 22 முதல் 2014 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3028-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் படி, பெருந்தெருக்கள் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. தென் பிராந்தியத்திலுள்ள அதிவேக வீதி வலைப்பின்னலுக்கும் உள்ளூர் போக்குவரத்து வலைப்பின்னலுக்கும் இடையிலான தொடர்பினை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் முறையே ரூபா 791 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 6 மில்லியனாவதுடன் அதில் ரூபா 659 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 5 மில்லியன் (எஸ்டீஆர் 3,329,000) தொகையை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 ஆகஸ்ட் 22 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 ஆகஸ்ட் 22 முதல் 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஏடீபீ | 5 | 659 | - | 0.34 | 44.76 |
| ஜீஓஎஸ்எல் | 1 | 132 | - | - | - |
| | 6 | 791 | - | 0.34 | 44.76 |

தெற்கு வீதி தொடர்புறுத்தல் செயற்திட்டத்திற்காக 2014 இற்கான பாதீட்டு மதிப்பீட்டில் கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் தொகை மற்றும் உள்ளூர் பங்களிப்பான ரூபா 60 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீடு மீளாய்வாண்டில் திறைசேரியினால் ஏனைய செயற்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் மதியுரைச் சேவைக்கான நேரடி கொடுப்பனவாக ரூபா 44.76 மில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்துரைத்த செயற்திட்டக் காலத்தில் செயற்திட்டக் குறிக்கோள்கள் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக முழுமையான செயற்திட்டக் காலத்தையும் உள்ளடக்கியவாறு ஒட்டுமொத்த செயற்திட்ட திட்டமொன்றும் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான செயற்திட்ட திட்டமொன்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் செயற்திட்ட செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கான மதியுரைச் சேவைகள் மற்றும் அதிவேகப் பாதைகள் வலைப்பின்னலை தொடர்புபடுத்தும் தேசிய பெருந்தெருக்களின் விரிவான பொறியியல் வடிவமைப்புக்களின் தயாரித்தல் என்பன 2014 திசெம்பர் 09 ஆந் திகதியன்றே ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அச் செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2.5 சதவீதமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.